# வியக்கவைக்கும் அன்பு

Translated from the original article, "Love so amazing"

By *Poul Madsen*

கிறிஸ்தவர்கள் அன்பைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள், பாடுகிறார்கள். ஆனால் ஆச்சரியம் என்ன வென்றால், அநேகக் காரியங்களுக்கு என்ன பாதிப்பு ஏற்பட்டதோ, அதே பாதிப்புதான் 'அன்பு' என்ற வார்த்தைக்கும் ஏற்பட்டிருக்கிறது. அந்த வார்த்தையை அடிக்கடியும், மிகவும் மேலோட்டமாகவும் பயன் படுத்தியதால், அது தன் ஆழமான அர்த்தத்தை இழந்துவிட்டது. தாங்கள் ஒரு புதிய அன்பைப் பெற் றிருப்பதாகக் கிறிஸ்தவர்கள் சாட்சி கூறுகிறார்கள். தாங்கள் இப்போது எல்லாரையும் நேசிப்பதாகவும் கூட சிலர் வெளியரங்கமாகச் சொல்கிறார்கள். அவர்கள் மனமாரத்தான் அதைச் சொல்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆனால், தாங்கள் சொல்வதின் பொருளை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது உறுதி. ஆகையால், இதைப்பற்றி அன்பின் அப்போஸ்தலன் என்ன கூறு கிறார் என்பதற்குச் செவிகொடுப்பது நிச்சயமாக உதவியாக இருக்கும்.

### 1. அன்பின் வெளிப்பாடு

"*தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் வாழும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப் பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது*" (1 யோவான் 4:9).

தேவனுடைய அன்பு மட்டுமே மெய்யான அன்பு; இந்த அன்பு மனிதனுடைய இயற்கையான அனுபவத் திற்கு மிகவும் அப்பாற்பட்ட ஒன்று. இதை நாம் உள்ளுணர்வினாலும் அறிய முடியாது; அல்லது நாமா கக் கண்டுபிடிக்கவும் முடியாது.

தாயின் அன்புதான், மனித அன்பின் மிக உயர்ந்த உருவம். அது மிக அழகானது, தூய்மையானது. எனவே, அதின் மேன்மையை உயர்த்திப் பாடுவதில் கவிஞர்கள் ஒருபோதும் களைத்துப்போவதில்லை. Hans Christian Anderson என்பவர் எழுதிய 'ஒரு தாயின் கதை' என்ற டென்மார்க் கதையில், தாயின் அன்பு எவ்வளவு மேன்மையானது என்பதைப்பற்றிய ஒரு மங்கலான காட்சியை நாம் காண்கிறோம். ஒரு தாய் தன் குழந்தைக்காகச் செய்கிற தியாகங்களுக்கு எல்லையே இல்லை—ஒன்றேவொன்றைத்தவிர. தன் நண்பர்களுக்காகவோ அல்லது தன் எதிரிகளுக்காகவோ அவள் தன் குழந்தையை ஒருபோதும் பலியாகக் கொடுக்கமாட்டாள். ஒரு தாய் தன் பாசக் குழந்தையை இன்னொருவனுக்காகப் பலியாகக் கொடுப்பதை ஒருபோதும் நினைத்துப்பார்க்க முடியாது. இந்த எண்ணம் ஒரு தாயின் அன்பைப்பற்றிய நம் கருத்துக்கு அந்நியமானது, ஒவ்வாதது. எனவே, மனித அன்பின் மிக உயர்ந்த வடிவத்திற்குக்கூட ஓர் எல்லை இருக்கிறது.

ஆனால், தெய்வீக அன்பிற்கு எந்த எல்லையும் இல்லை. தேவனுடைய அன்பு, இன்னும் கொஞ்சம் அதிக மேன்மையாக்கப்பட்ட ஒரு தாயின் அன்பல்ல; அது பரிபூரமாணமாக்கப்பட்ட மனித அன்பல்ல. அது நமக்குத் தெரிந்திருக்கிற அன்பின் மிக உயர்ந்த வடிவத்தைவிட மிகவும் வித்தியாசமானது. இந்தக் காரணத்தினால், அது நமக்கு வெளிப்படுத்தப்பட்டால் அல்லது "வெளிக்காண்பிக்கப்பட்டால்" மட்டுமே நம்மால் அதை அறிய முடியும். எனவேதான் யோவான் இந்தப் பதத்தைப் பயன்படுத்துகிறார். இந்த அன்பு மனிதனுடைய புரிந்துகொள்ளுதலுக்கு மிக அப்பாற்பட்டது; எனவே, தெய்வீக வெளிப்பாட்டினால் மட்டுமே நாம் இதைப் பெற முடியும். இவை கனமான வார்த்தைகள். தேவனுடைய அன்பு, அவருடைய அல்லது நம்முடைய உணர்ச்சிவசப்பட்ட உணர்ச்சிகளைப்பற்றிய காரியம் அல்ல என்று அவை நமக் குப் போதிக்கின்றன. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதை உணர்ந்தாக வேண்டும். தெய்வீக அன்பின் இந்த வெளிப்பாடு அல்லது வெளிக்காண்பித்தல் நம் உள்ளான உணர்ச்சிகளோடு சம்பந்தப்பட்டவை அல்ல. உம் மையான அன்பின் வெளிப்பாடு தேவன் என்ன செய்தாரோ அதில் இருக்கிறது. இதில் நமக்கு எந்தப் பங்கும் இல்லை.

தேவன் தம் ஒரேபேறான குமாரனை நமக்காக இந்த உலகத்திற்கு அனுப்பினார். பிதாவானவர் தம் நேச குமாரனை பாவ மனிதர்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார் என்பதும், தம் எதிரிகளின் வேலைக்கார னாக மாற குமாரன், தம் பங்குக்கு, தம் பரலோக மகிமையைத் துறந்தார் என்பதுமே இதன் பொருள்.

பிதாவானவர் எவ்வளவாய் அன்புகூர்ந்தார் என்றால், நம் எல்லாக் குற்றங்களையும், நாம் இழந்த நிலைமையையும் சுமப்பதற்கு அவர் தம் குமாரனையே தந்தருளினார். நான் மீண்டும் கேட்கிறேன்: எந்தத் தாயாவது தன் எதிரிகளினிமித்தம் தன் குமாரனை இந்த அளவுக்குத் துறம்பாளா? பொல்லாத மனிதர்கள்மேல் தான் கொண்டுள்ள அன்பை வெளிக்காட்ட எந்தத் தாயாவது தன் குழந்தையை அவர் களுடைய கைகளில் ஒப்புக்கொடுப்பாளா? சுபாவத்தின்படி, நாமெல்லாரும் தேவனுடைய எதிரிகளாக இருந்தோம்; இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் வாழும் படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினார் என்று யோவான் கூறுகிறார். மிகச் சிறந்த அன் பினால்கூட நமக்கு ஜீவனைத் தர முடியாது என்று இந்த உண்மை சுட்டிக்காட்டுகிறது. குமாரன் இந்த உலகத்திற்கு நம் இரட்சகராக வராமல் இருந்திருந்தால், நாமெல்லாரும் மரணத்தில்தான் நிலைத்திருந் திருப்போம்; இதற்கு யாரும் விதிவிலக்காக இருந்திருக்க மாட்டார்கள். எனவே, முற்றிலும் வித்தியாச மான இன்னொரு வகையான அன்பு சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படாமல் இருந்திருந்தால், மிகச் சிறந்த தாய்கூட—அவளிடம் எவ்வளவு அன்பு இருந்தாலும் சரி—இன்னும் தேவனுடைய எதிரியாகவும், ஆவிக்குரிய மரணத்திலும்தான் இருந்திருப்பாள்.

தேவனுடைய அன்பே சுவிசேஷத்தின் இதயத் துடிப்பு. இதைப்பற்றி நமக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக்கொள்கிறோம். இந்த அன்பு, அன்பைப்பற்றிய மனிதனுடைய எல்லாக் கருத்துகளையும்விட, மிக உயர்ந்த மண்டலத்தில் இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோமா? எந்தத் தகப்பனும் அல்லது தாயும் ஒருபோதும் செய்யமுடியாத ஒன்றை வியக்கவைக்கும் தம் அன்பினாலே தேவன் செய்தார். உங்கள் எதிரிகளுக்குப்பதிலாக உங்கள் மகனை சித்திரவதைசெய்து கொலைசெய்வதை உங்களால் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? உங்களைப் புறக்கணித்தவர்கள்மேல் நீங்கள் கொண்டுள்ள அன்பி னிமித்தம், துயரத்தின் பாத்திரம் உங்கள் மகனிடமிருந்து விலகிப்போவதை உங்களால் மறுக்கமுடியுமா? அங்கு தலையிட்டு, வதைப்பவர்களிடமிருந்து அவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற உந்துதலை உங் களால் எதிர்த்துத் தாக்குப்பிடிக்க முடியுமா? முடியாது, உங்களால் முடியாது. அப்போது உங்களால் செய்திருக்க முடியாது என்றால், இப்போதும் உங்களால் செய்ய முடியாது. உங்களுடைய மிகச் சிறந்த நண்பர்களுக்குக்கூட அப்படிச் செய்ய முடியாது. அப்படியானால் எதிரிகளைப்பற்றி சொல்லவே வேண்டாம்.

இருந்தபோதும், தேவனுடைய உணர்ந்தறியமுடியாத இந்த அன்பினிமித்தம் மட்டுமே நாம் ஜீவனைப் பெற்றிருக்கிறோம். அவருடைய இந்த அன்புதான் இவையெல்லாவற்றையும் செய்தது. இந்த அன்பி னால், இந்த அன்பினால் மட்டுமே, நாம் இந்த உண்மையான ஜீவனைப் பெற்றிருக்கிறோம். இந்த அன்பினாலும், சிலுவையின் பரிகார வேலையினாலும், நாம் நம் எல்லாக் குற்றங்களிலிருந்தும், ஆக் கினைத்தீர்ப்பிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். மேலும், பரிபூரணமான நீதிமான்களுக்கு மட்டுமே உரிய அந்த ஜீவனை விசுவாசத்தினால், இம்மையிலும் நித்தியத்திலும், பெற்றிருக்கிறோம்.

## 2. அன்பின் குணம்

"*நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங் களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது*" (1 யோவான் 4:10).

எல்லா வகையான மனித அன்பிலும்—அது எவ்வளவுதான் பெரியதாக இருந்தாலும் சரி—சுயநலம் என்ற அடிப்படை மூலக்கூறு இருக்கிறது. அன்புகூரும்போது, அதிலிருந்து நாம் கொஞ்சம் திருப்தியடையும் போது மட்டுமே நம்மால் அன்புகூர முடியும். இது ஆச்சரியப்படத்தக்க விஷயம் அல்ல. ஏனென்றால், நாம் பாவிகளாக இருப்பதால், நம்முடைய எல்லா வகையான அன்பிலும் பாவக்கறை கொஞ்சம் இருக்கத்தான் செய்யும். இருந்தபோதும், தேவனுடைய அன்பில் எந்தக் குறையும் இல்லை என்று யோவான் உறுதியாகக் கூறுகிறார். அது மாறத்தக்கதல்ல; அது அசையாத பாறை. மற்ற அன்புகளோடு ஒப்பிடும்போது—மிகச் சிறந்த அன்பாக இருந்தாலும்கூட—தேவனுடைய அன்பு வாழ்விலோ அல்லது சாவிலோ ஒருபோதும் ஒழியாது. அதில் காலத்துக்கு அப்பாற்பட்ட அம்சமும், வரலாற்று அம்சமும் இருக்கின்றன.

அதின் காலத்துக்கு அப்பாற்பட்ட தன்மை, நாம் அவரிடத்தில் அன்புகூர்வதற்குமுன்பே, அவர் நம்மிடத் தில் அன்புகூர்ந்தார் என்ற உண்மையில் வெளிப்படையாகத் தெரிகிறது. சற்று முன்பு அல்ல, மாறாக

நீண்ட காலத்துக்குமுன்பே என்பதே அதன் பொருள். சரியாகச் சொல்ல வேண்டுமானால், உலகத் துக்கு அஸ்திபாரம் போடப்பட்டதிலிருந்து. காலம் தொடங்குவதற்குமுன்பே, தம் பிள்ளைகளாக இருக்க அவர் நம்மை கிறிஸ்துவுக்குள் நேசித்தார், தெரிந்தெடுத்தார். நீங்கள் தேவன்மேல் கொண்ட அன்பினி மித்தம் நீங்கள் தேவனைத் தெரிந்தெடுக்கவில்லை. மாறாக, உங்கள்மேல் கொண்ட அன்பினிமித்தம், உலகத் தோற்றத்திற்குமுன்பே அவர் உங்களைத் தெரிந்தெடுத்தார். ஆகையால், தேவனுடைய அன் பின்மேல் நீங்கள் கட்டும்போது, நீங்கள் அசைக்கமுடியாத ஓர் அஸ்திபாரத்தைக் கொண்டிருக்கிறீர்கள். அவருடைய அன்பு உணர்ச்சிவசமானது அல்ல; அது மனித அன்பைப்போல், உணர்ச்சிகளின் ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டதல்ல. மனித அன்பில் எப்போதும் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். தேவ னுடைய அன்பு ஏறி இறங்குவதில்லை. அது சோர்ந்துபோகாது. 1 கொரிந்தியர் 13:8 கூறுவதுபோல், அன்பு, இந்தத் தெய்வீக அன்பு, ஒருபோதும் ஒழியாது. அதின் தன்மை, நித்தியத்திற்கும் நிரந்தரமானது.

வரலாற்று அம்சத்தைப் பொறுத்தவரை, தேவன் தம் அன்பினிமித்தம் தம் குமாரனை நம் பாவங்களுக் கான கிருபாதார பலியாக அனுப்ப வேண்டியிருந்தது என்று அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார். தேவ னுடைய அன்பு வெறும் வார்த்தைகளைப்பற்றிய காரியம் அல்ல, மாறாக அது கிரியைகளைப்பற்றிய காரியம். அதுவும் சாதாரணமாக கிரியைகளைப்பற்றிய காரியம் அல்ல; மாறாக, மனிதனுடைய புரிந்து கொள்ளுதலை முற்றிலும் திணறடிக்கிற கிரியைகள். "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்," (ஏசாயா 53:6) என்று தீர்க்கதரிசி கூறுகிறார். இது அன்பைப்பற்றிய மனித னுடைய கம் ணோட்டத்திற்கு அப்பாற்பட்டது மட்டுமின்றி, நீதியைப்பற்றிய மனிதனுடைய எல்லாக் கருத்துகளுக்கும் அப்பாற்பட்டதுமாகும். இந்தத் தலைப்பைப்பற்றி பவுல் பேசும்போது அவர் பயன்படுத் தும் வார்த்தைகள் அறிவுபூர்வமானவைளாகத் தோன்றவில்லை. எடுத்துக்காட்டாக, தேவன் உலகத்தை கிறிஸ்துவின்மூலம் தம்மோடு ஒப்புரவாக்கினார் என்று அவர் கூறுகிறார். இது முட்டாள்தனமான கூற்று என்று அறிவுபூர்வமான மனதுடைய யாரும் கூறுவார்கள். உலகம் தன்னைத்தானே தேவனோடு ஒப்புர வாக்கினது என்று நீங்கள் சொல்லலாம். உலகம் தேவனோடு ஒப்புரவாகவேண்டிய நிர்ப்பந்தத்தின்கீழ் இருந்தபோதும்கூட, அது அப்படி ஒப்புரவாகவில்லை, ஒப்புரவாகமுடியவில்லை. அல்லது தேவன் தம்மை உலகத்தோடு ஒப்புரவாக்கினார் என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், நிச்சயமாக அவர் இப் படிப்பட்ட எந்தக் காரியத்தையும் செய்யவில்லை. ஏனென்றால், மீறுதலைச் செய்தவர் அவர் அல்ல. ஆனால், தேவன் உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கினார் என்று கூறுவது முழுக்க முழுக்க அறிவுபூர்வ மானதே அல்ல என்பதுபோல் தோன்றுகிறது. இருந்தபோதும், இதுதான் அற்புதமான சத்தியம். இது தான் தேவனுடைய அன்பின் வியக்கவைக்கும் குணம். மனித உறவுகளில், உங்கள் எதிரி தன்னை உங்களோடு ஒப்புரவாக்கலாம் அல்லது நீங்கள் உங்களை அவனோடு ஒப்புரவாக்கலாம். ஆனால், உங்கள் எதிரியை உங்களோடு ஒப்புரவாக்குவதைப்பற்றி பேசுவது முட்டாள்தனமாக இருக்கும். நீங் களும் உங்கள் எதிரிகளும் ஒருவரோடொருவர் ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் உறுதி யாகக் கூறலாம். ஆனால், தங்களைத் தேவனோடு ஒப்புரவாக்க வேண்டும் என்ற எந்த ஆசையும் தேவ னுடைய எதிரிகளிடம் இருக்கவில்லை. (நாமும் தேவனுடைய எதிரிகளாகத்தான் இருந்தோம்.) மாறாக அவரைவிட்டு ஓடிவிட வேண்டும் அல்லது அவருக்குத் தங்கள் முதுகைக் காட்ட வேண்டும் என்றுதான் அவர்கள் விரும்பினார்கள்.ஆனால், இதுவே மனிதனுடைய அறிவுக்கு சவால்விடுகிற, மனித மொழிக்கு அப்பாற்பட்ட, வியக்கவைக்கும் சத்தியம். தேவனுடைய அன்பு எல்லையற்றது. இதில் சுயநலத்தின் மூலக்கூறு இல்லவே இல்லை. மெய்யாகவே இது எவ்வளவு தூய்மையானது என்றால், கறைபடிந்த நம்மால் அதின் அற்புதங்களை நேர்த்தியாகக் கிரகித்துக்கொள்ள முடியாது; அவருடைய அன்பின் சுபா வம் எம்படிம்பட்டதென்றால் நாம் அவரை நினைத்துப்பார்ப்பதற்குமுன்பே தம் சொந்த இரத்தத்தால் நம் பாவங்களைக் துடைத்தழிக்க அது தம் குமாரனை அனுப்பியது என்பதை விசுவாசிப்பது நமக்குக் கடினமாக இருக்கிறது. தேவனுடைய அன்பு என்ற இந்த உறுதியான பாறையோடு ஒப்பிடும்போது, அன்புகூர்வதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளெல்லாம் நிலைமாறும் மணல்.

இந்த அன்பு வெறுமனே கடந்த கால வரலாறு மட்டும் அல்ல; மாறாக, நிச்சயமாக இன்றைக்கும் இது செல்லுபடியாகும் என்பதைக் கவனியுங்கள். "...*அன்பு உண்டாயிருந்தது*" என்று யோவான் எழுத வில்லை. "...*அன்பு உண்டாயிருக்கிறது*" என்று யோவான் எழுதுகிறார். இருந்தபோதும், பின்னோக்கிச் சென்று சிலுவையைப் பார்ப்பதின்மூலம் மட்டுமே நாம் அந்த அன்பை அறிகிறோம். ஏனென்றால், "...*நம்மிடத்தில் அன்புகூர்ந்து...அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது*," என்று அம்போஸ்

தலன் கூறுகிறார். எனவே, கல்வாரிச் சிலுவையில் அவர் செய்துமுடித்த வரலாற்று அம்சமுடைய அந்த மாபெரும் பலியின் அடிப்படையில் மட்டும்தான் நாம் இன்று அவருடைய தற்போதைய அன்பை அறிகிறோம். இப்படிப்பட்ட பார்வை நம் கவனத்தை நம்மைவிட்டு விலக்கிக் கொண்டுசெல்கிறது. நாம் பின்னோக்கிப் பார்க்கையில், நாம் தூரமாகவும் பார்க்கிறோம், அன்பாக இருக்கிற அவரைத் தூரத்தில் காம் கிறோம். அதே கல்வாரி அன்புதான், சிலுவை மரத்தின்மேல் தம் சரீரத்தில் நம் பாவங்களைச் சுமப்பதற்கும், தமக்குரியவர்களை முற்றுமுடிய நேசிப்பதற்கும் நம் இரட்சகரை ஏவிய அதே அன்பு தான், இன்றைக்கும் கிரியைசெய்கிறது. இதுதான் ஆவியானவரின் அன்பு; இந்த அன்பைக்குறித்து சாட்சிகூறுவதில் அவர் ஒருபோதும் களைப்படைவதேயில்லை. நாம் வேறு எந்த அன்பைப்பற்றியும் பேசவோ அல்லது பிரசங்கிக்கவோ முடியாது. அதின் மகத்துவம் நம்மைத் திக்குமுக்காடச் செய்கிறது.

### 3. அன்பின் கடன்

"*பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்*" (1 யோவான் 4:11).

இப்படிப்பட்ட அன்பு நம்மைக் கடனாளிகளாக்குகிறது என்பது வெளிப்படை. நாம் எப்போதும் மனிதர் களுக்கு ஒரு காரியத்தில் கடன்பட்டிருக்கிறோம். அது அன்பு என்னும் கடன். "ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" (ரோமர் 13:8). இதை நாமெல்லாரும் ஒப்புக்கொள்வோம். ஆனால், இந்தக் கடமையை நம்மால் எப்படி நிறைவேற்ற முடியும், இந்தக் கடனை நம்மால் எப்படித் தீர்க்க முடியும் என்ற பிரச்சினை நம்மெல்லாருக்கும் இருக் கிறது. தன்னைத்தான் நேசிப்பதுபோல பிறனையும் நேசிக்க வேண்டும் என்ற பிரச்சினையை உடனடி யாகத் தீர்க்கக்கூடிய அளவுக்கு தெய்வீக அன்பின் நிரப்பீட்டைத் தருகிற விசேஷமான, பலமான அனு பவத்தை நாம் பெற முடியும் என்று தேவனுடைய வார்த்தை நமக்குப் போதிக்கவில்லை. நம் இருதயங் களுக்கு பெரிய வெதுவெதுப்பைத் தரக்கூடிய அனுபவங்களை நாம் பெறக்கூடும்; ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நம்மால் எல்லாரையும் நேசிக்க முடியும் என்பதுபோல் நாம் உணரக்கூடும். ஆனால், நாம் சொல்லிக்கொண்டிருப்பதுபோல், இது வெறுமனே அன்பைப்பற்றிய உணர்ச்சி அல்ல. இது அதைவிட ஆழமானது, அதைவிட ஆவிக்குரியது. அப்படியானால், யோவான் விவரிக்கிற வகையில் அன்புகூர் வதற்கு, தேவன் தம் அன்பின் நிரப்பீட்டை நமக்கு வழங்காவிட்டால், நம்மால் எப்படி அன்புகூர முடியும்?

'எம்படி' என்ற இந்தக் காரியம் எப்போதும் நம்மைத் திணறடிக்கும் என்று நான் முதலாவது கூற விரும்பு கிறேன். அது அப்படி நம்மைத் திணறடிக்காவிட்டால், அன்புகூருகிற இந்தக் காரியத்தை நம்மால் சமா ளிக்க முடியும் என்று நாம் நினைக்க ஆரம்பித்துவிடுவோம். அப்படி நினைக்க ஆரம்பித்துவிட்டால், நம்மிடத்தில் ஏதோவொன்று பயங்கரமாக தவறாக இருக்கிறது என்று பொருள். மற்றவர்களை நேசிப் பதைம்பற்றி மேலோட்டமாக ஏனோதானோவென்று பேசிக்கொம் டிருக்கிற மனிதன், தன்னால் இம் போது மற்றவர்களை நேசிக்க முடியும் என்று தன்மேல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சுயநம்பிக்கை வைத் திருக்கிற மனிதன், இறுமாப்பு மற்றும் வஞ்சகம் என்னும் பெரிய ஆபத்தில் இருக்கிறான். மனமார ஆவி யில் ஏழ்மையாயிருக் கிறவர்களால் மட்டுமே பரலோக இராஜ்ஜியத்தின் வல்லமையை அறிய முடியும். ஒருவன் தன்னிடம் மாபெரும் அன்பு இருப்பதாகக் கோரலாம்; ஆனால், வெளியரங்கமாகத் தாழ்மை யுடன் தேவனைச் சார்ந்திருப்பதில் குறைவுபட்டால், அதாவது ஆவியில் ஏழ்மையாக இல்லையென் றால், அது வஞ்சகம் என்னும் தவறாகும். எனவே, நம் பற்றாக்குறையினிமித்தம் நாம் ஆறுதலடைவோ மாக. அவர் அன்புகூர்ந்ததுபோல் எப்படி அன்புகூர வேண்டும் என்று நமக்குத் தெரியவில்லை என்ப தால் நாம் நம்பிக்கை இழந்துவிட வேண்டாம்.

இதைவிட அதிகமாக வேறு என்ன செய்யலாம்? நம் ஏழ்மையைக் கர்த்தரிடம் கொண்டுசெல்வோம். இந்தப் பெரிய கடன் சுமையை சுமக்க இயலாத நம் இயலாமையை அவரிடம் அறிக்கைசெய்வோம். நம் கடன்களெல்லாம் கொடுத்துத் தீர்க்கப்பட்ட இடமாகிய சிலுவைக்கு மறுபடியும் வருவோம். வியக்க வைக்கும் இத்தகைய அன்பைத் தன்னால் வழங்க முடியாது என்று உண்மையாகவே ஆவியில் ஏழ்மை யாக இருப்பவனுக்குத் தெரியும். எனவே, அவன் தன்னைத் தாழ்த்தி சிலுவைக்குமுன் வருகிறான். அங்கு அவன் வியக்கத்தக்கதாகவும், பெருமகிழ்ச்சியடையத்தக்கதாகவும், தெய்வீக அன்பின் புதிய வெளிக்காண்பித்தலைக் காண்கிறான். எனவே, நாம் ஒரு முழு வட்டத்தைச் சுற்றி வந்துவிட்டோம்.

தேவனுடைய அன்பு அவருடைய குமாரனின் மரணத்தில் வெளிக்காகண்பிக்கப்படுகிறது என்று கூறி ஆரம்பித்தோம். இப்போது அந்தச் சிலுவையில் கிருபையின் புதிய நிரப்பீட்டைக் காண்கிறோம். இந்த கிருபையிலிருந்து நாம் மொண்டுகொள்ள முடியும், அந்த அன்பை நாம் தாழ்மையுடன் பெற்றுக் கொண்டு, நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் தாழ்மையுடன் வெளிக்காட்டலாம்.

ஆனால், கடன்காரனாகிய அவன் கொடுக்க வேண்டிய கடனை ஒருபோதும் கொடுத்துத் தீர்ப்பதில்லை. செலுத்த வேண்டிய எல்லாக் கடனையும் செலுத்தி அவன் விடுதலையாகி விட்டான், எனவே இனிமேல் அவனுக்கு எந்தக் கடமையும் இல்லை என்னும் அளவுக்கு அவன் தன் அன்பின் கடனை ஒருபோதும் கொடுத்துத் தீர்ப்பதில்லை. எத்தனைமுறை கடனைச் செலுத்தினாலும் சரி, அன்பு என்னும் கடன் ஒரு போதும் குறைவதேயில்லை. எனவே, இப்படிப்பட்ட அன்பைக் காண்பிப்பது இனி கொஞ்சம் எளிது என்று கடன்காரன் ஒருபோதும் நினைப்பதேயில்லை. உண்மையில், இதற்கு நேர்மாறானதுதான் உம் மை. ஏனென்றால், அவன் எவ்வளவு நெருக்கமாக சிலுவையிடமும், சிலுவையின் கிறிஸ்துவிடமும் வருகிறானோ, அந்த அளவுக்குக் கடன் அதிகமாகிறது, கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான அவ னுடைய இயலாமை அவனைத் திகைப்புக்குள்ளாக்குகிறது. இருந்தபோதும், தெய்வீக அன்பின் மட் டற்ற நிறைவை அவன் சிலுவையில் கண்டுபிடிக்கிறான். எனவே, தான் மிகவும் தரித்திரன், வல்லமை யற்றவன் என்பதை அதிக மதிகமாகக் கண்டுபிடித்தாலுங்கூட, அன்பின் கோரிக்கைகளை அவனால் நிறைவேற்ற முடியும். அவன் தன் கடனைத் தீர்த்துக்கொண்டேயிருக்கிறான். ஆனால், அவன் தான் செலுத்துகிற தொகைக்கு ஒருபோதும் இரசீது பெறுவதில்லை. மற்றவர்கள் அவனைப்பற்றி என்ன நினைத்தாலும் சரி அல்லது பேசினாலும் சரி, செலுத்த வேண்டிய கடன் இன்னும் தலைக்குமேல் இருக் கிறது என்று அவனுக்குத் தெரியும். ஆனால், ஒவ்வொரு நாளும், சிலுவையின் அடியில் காணக்கூடிய அன்பின் அளவற்ற செல்வத்தை அவன் புதிது புதிதாகக் கண்டு, ஆவிக்குரிய வாழ்க்கையின் உன்னத பாடமாகிய விசுவாசத்தைக் கற்றுக்கொண்டே போகிறான். “விசுவாசத்தில் நம்மைச் சிநேகிக்கிறவர் களுக்கு வாழ்த்துதல் சொல்லு,” (தீத்து 3:15) என்ற பவுலின் வார்த்தைகளோடு முடிப்பதைவிட, இதை வேறு எம்படிச் சிறப்பாக முடிக்க முடியும்? மெய்யான அன்பைக் காண்பிக்க வேண்டும் என்பதைப்பற்றி நாம் அக்கறைப்படும்போது, ஒரேவொரு வழி மட்டும் தான் இருக்கிறது––அது *விசுவாசத்தின்* வழி.